REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 12உ புதன் (28—8—57) ★ ★ வெளியூர்: ஆவணி 13உ வியாழன் (29—8—57) [இதழ் 64

'புண்ணிய'த்தைக்கூட மலிவாகச் சம்பாதிக்கும் 'பனியா'க்கள்!

புதுடில்லி, ஆக. 27—

பனியாக்கள்' புண்ணியத்தைக்கூட மலிவாகச் சம்பாதிக்க நினைப்பதாக மத்திய உணவிலாகா உதவி மந்திரி எம்.வி. கிருஷ்ணப்பா மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

"நாட்டில் உருவாகிவரும் முக்கியமான திட்டங்களைப் பார்த்துவருவதற்காக விவசாயிகளுக்கென சென்ற ஆண்டில் விசேட இரயில் ஏற்பாடு செய்யப்பட்டது; அதில் கட்டணச் சலுகை பெற்று விவசாயிகள் பிரயாணம் செய்ய

(4-ம் பக்கம் பார்க்க)

'புரட்சி வீரர்'களின் 'புனித' சேவை!

இந்திய நிதி நிலைமை

அச்சங்கொள்ள வேண்டாமாம்!

இந்தியாவின் நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாகவே இருக்கிறதாம்! அதைப் பற்றி யாரும் அச்சமோ, தோல்வி மனப்பான்மையோ கொள்வது சரியல்லவாம்!

பண்டித நேரு, பாராளுமன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் இதைத் தெரிவித்திருக்கிறார்.

ஏழுமாதங்களில் 2,300 விபத்துக்கள்!

மாநிலங்கள் சபையில் தகவல்

"இவ்வாண்டு (ஜனவரிமுதல் ஜூலை முடிய) ஏழுமாதங்களில் மட்டும் இந்திய இரயில்வேக்களில் 2,300 விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் ஏற்பட்ட சேதத்தின் ரூ. 12,70,756"

பதவிக்கு வந்தபின் 'பாடம்' கற்கும் அமைச்சர்கள்!

புதுடில்லி, ஆக. 28—

இதோ உமாயூன் கபீர் போக்குவரத்து அமைச்சர் — உள்நாட்டுக் கால்வாய்ப் போக்குவரத்து பற்றித் தெரிந்துகொள்கிறார்!

இதோ கார்மார்க்கர்—சுகாதார அமைச்சர்—'வாக்சின்' பற்றித் தெரிந்துகொள்ள முயற்சிக்கிறார்!

அதோ ஜெய்சுக்லால் ஹாதி நீர்ப்பாசன அமைச்சர் — சிமெண்டுக்கு மாற்றாக 'போசலின்' பற்றிக் கற்றுக்கொண்டு வருகிறார்!

இப்படிப் பேசியுள்ளார் டாக்டர் எஸ். இராதாகிருட்டினன்—அதுவும், மாநிலங்கள் சபையில்!

பதவியில் இருந்துகொண்டே அந்தந்த இலாகாவின் துறை பற்றிய பிரச்சினைகளை அமைச்சர்கள் கற்றுக் கொள்கின்றனர் என்று சபையில் அவர் கூறியுள்ளார்!

படாஸ்கர் தீர்ப்பு:

180 கிராமங்கள் ஆந்திராவிற்கு; 320 சதுர மைல் தமிழகத்திற்கு!

ஓசூர் இங்கேயே தங்கும்

ஐதராபாத், ஆக. 27—

திருத்தணி நகரம் உட்பட திருத்தணி தாலுகாவில் சுமார் 320 சதுர மைல் பிரதேசம் சென்னை மாநிலத்திற்குத் தரப்படவேண்டும் என்றும், அதேபோது, சென்னை மாநிலத்தில் உள்ள திருவள்ளூர், பொன்னேரி தாலுகாக்களில் அதே அளவு பிரதேசம் ஆந்திர மாநிலத்திற்குத் தரப்படவேண்டும் என்றும், படாஸ்கர் தமது தீர்ப்பில் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஓசூர் தங்களுக்கு வேண்டுமென ஆந்திர சர்க்கார் எழுப்பியிருந்த கோரிக்கையை படாஸ்கர் நிராகரித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஓசூர், ஒரு மும்மொழி வழங்கும் பகுதி என்றும், அதனை ஆந்திரத்துடன் சேர்ப்பதற்கு நியாயம் இல்லை என்றும், அது சென்னையுடனேயே இருக்கலாம் என்றும் படாஸ்கர் கூறியிருக்கிறாராம்.

பொன்னேரி தாலுகாவில் உள்ள 320 கிராமங்களில் சுமார் 100 கிராமங்கள் ஆந்திராவுக்குப் போய்விடும் என்றும், திருவள்ளூர் தாலுகாவிலிருந்து 80 கிராமங்களும் ஆந்திராவுக்குப் போய்விடும் என்றும் கூறப்படுகிறது.

ஆரணியாறுத் திட்டம் உட்பட 12 தமிழ் கிராமங்கள்கூட ஆந்திராவுக்குத் தரப்படவேண்டுமெனச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதாம்.

ஆரிய தர்மத்தைக் காக்க அரும்பணியாற்றியவர்கள்!

விக்டோரியா அரசர்க்கரசியின் பிரகடனத்திற்குவழிசெய்தவர்கள்!

காஞ்சி சங்கராச்சாரியாரின் புகழ்மாலை!

காஞ்சீபுரம், ஆக. 28—

"நமது தொன்மையான கலாச்சாரத்திற்கும், பாரம்பரியத்திற்கும், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில்—குறிப்பாக கம்பெனி ஆட்சிக் காலத்தில் கிருத்துவ மிஷன் குடியேற்றக்காரர்களின் நடவடிக்கைகளால் பெருந் தடை ஏற்பட்டது.

"இதுதான் 1857 சுதந்திரப் புரட்சிக்குக் காரணமாகும்.

"ஜான்சி ராணி, தாந்தியா தோபே, நானாசாகிப், மற்றும் பலர் நமது பழந்தருமத்தையும், கலாச்சாரத்தையும் பாதுகாப்பதற்காகப் போரிட்டனர்; இந்தத் தர்மமும், கலாச்சாரமும்தான் நமது புராணங்கள், சாஸ்திரங்கள், சட்டங்கள்—ஏன் நமது வாழ்விற்கே அடிப்படையாக அமைந்திருப்பனவாகும்.

"1857 போராட்டத்தில் தியாகம் புரிந்தவர்கள் இல்லாதிருந்தால் நமது கலாச்சாரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக நாம் கஷ்டப்பட்டு முயற்சிப்பதே முடியாதுபோயிருந்திருக்கும்.

"அவர்களின் தியாகம்தான், அரசர்க்கரசி விக்டோரியா மகாராணியாரின் ஆட்சி இந்த நாட்டில் பிரகடனப்படுத்துவதற்கு வழிகோலியது; அந்த இராணியின் ஆட்சிதான், அன்னிய ஆட்சியின்கீழும் கூட நமது வேதத்தையும், மதத்தையும் நாம் வைத்துக்கொள்ள—காப்பாற்றிக்கொள்ள அனுமதித்தது.

"ஜான்சி ராணி, தாந்தியா தோபே, நானா சாகிப், மற்றும் எண்ணற்ற வீரர்கள், தாய்நாட்டிற்காக தியாகம் செய்திராவிட்டால், நமது வேதபாரம்பரியம் இப்போதைய நிலையில்கூட ஜீவித்திருக்கமுடியாது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. எனவே நாம், இந்தத் தியாகிகளுக்காக இப்போது இராமநாம பிரார்த்தனை செய்வோம்; துதிபாடி பஜனை செய்வோம்"

என்பதாக, காஞ்சி காமகோடி பீடாதிபதியான சங்கராச்சாரிய சுவாமிகள், 'சுதந்திரப் போர் நூற்றாண்டு விழா'வன்று (ஆகஸ்டு 16) மடத்தில் நடைபெற்ற 'வேத சதஸ்' கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சேலம் மாக்னசைட் சோகக் கதை

'சென்னை சர்க்காரின் எதிர்ப்பையும் மதியாமல் ஒரு இலட்சம் பவுன் இழந்தது ஏன்?'

மக்கள் சபையில் கண்டனம்

புதுடில்லி, ஆக. 28—

சேலம் மாக்னசைட் சோகக் கதை, டெல்லி மக்கள் சபையில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை மாநில மந்திரி சபையின் எதிர்ப்பைத் துச்சமென மதித்து, டெல்லி சர்க்கார் தம்மிச்சையாக இந்த விவகாரத்தில் நடந்துகொண்டவிதம் வன்மையாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

டெல்லி சர்க்காரின் ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கைதான் இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணமென்பதையும், சர்க்கார் செய்த தவறுகளின் விளைவாகத்தான் அன்னியச் செலாவணி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் விளக்கிய கேரள கம்யூனிஸ்டு உறுப்பினர் வி.பி. நாயர், சேலம் மாக்னசைட் விவகாரத்தை விவரித்திருக்கிறார்.

"ஸ்டர்லிங் முதலீடு கொண்ட பிரிட்டிஷ் கம்பெனி ஒன்று, சேலம் மாக்னசைட் எடுப்பதற்கு தன்னிடமிருந்த குத்தகை ஒப்பந்தத்தை கல்கத்தா கம்பெனி ஒன்றுக்கு விற்றது. இதற்காக அந்தக் கம்பெனி லண்டனில், இந்தியக் கம்பெனியிடமிருந்து ஒரு இலட்சம் பவுன் பெற்றுக்கொண்டது. இந்த ஏற்பாட்டினை சென்னை மாநில சர்க்கார் எதிர்த்தார்கள். என்றாலும், டெல்லி சர்க்கார் இந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் ஏற்பாட்டிற்கு உடன்பட்டது. இந்த நாடு, ஒரு இலட்சம் பவுனை இழப்பது எப்படிச் சாத்தியமாகும்?"

என்று தோழர் வி. பி. நாயர் வினவியிருக்கிறார்.

சோஷலிசம் எது?

பண்டிதரின் புது விளக்கம்

"ஒரு சிலரிடமிருந்து பணத்தைப் பிடுங்குவதும், அதைப் பலருக்குப் பகிர்ந்து அளிப்பதும் சோஷலிசமல்ல; சிறந்த விஞ்ஞான அடிப்படையில் உற்பத்தியை அதிகரிப்பதின் மூலமே சமுதாயத்தின் நலனை எய்தமுடியும். கடும் உழைப்பின் மூலமே இந்தியா வளமையடையும். ஜெர்மனியைப் போல நமக்குக் கடும் உழைப்பு தேவை; ஆனால், பிரெஞ்சு நாட்டைப்போல அறிவு நுட்பம் இருந்து பயன் இல்லை"

என்று, பண்டித நேரு, பாராளுமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கூட்டத்தில் சோஷலிசம் பற்றி விளக்கம் தந்துள்ளார்.

இறக்குமதி கட்டுப்பாட்டின் பெயரால் தமிழகத்திற்கு வஞ்சகமா?

கேட்டது 15,000 மோட்டார்; கிடைப்பதோ 700 மட்டும்

மக்கள்சபையில் கண்டனக் குரல்

'சென்னையின் தொழில் வளர்ச்சிக்கு டில்லி விசேட கவனம் செலுத்த வேண்டும்'

தென்னாட்டிற்கு—குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கு, அபிவிருத்தித் திட்டங்களில் அதிக பங்கு வேண்டும் என்று தென்காசி உறுப்பினர் சங்கரபாண்டியன், மக்கள்சபையில் வற்புறுத்தியிருக்கிறார்.

"சிறு தொழில் வளர்ச்சித் திட்டங்களில் சென்னை மாநிலம், மத்திய சர்க்காரின் விசேட கவனத்திற்குரியதாகும்"

என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"கனரகத் தொழில்களுக்கு சர்க்கார் துறையில் ரூ. 1,500 கோடியும், தனியார் துறையில் ரூ. 2,500 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சிறு தொழில் வளர்ச்சிக்கு ரூ. 55 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருகிறது. இது பரிதாபப்படத்தக்க அளவு மிகக் குறைவானதாகும். தவணைகளில் செலுத்தக்கூடிய கடனுக்கு நவீன இயந்திரங்கள் வாங்கிக்கொள்ள சிறு தொழில் வளர்ச்சிக்குப் பாடுபடக்கூடிய தனிப்பட்டவர்களுக்கு வசதி செய்துதர சர்க்கார் முன்வரவேண்டும்"

என்றும், சங்கரபாண்டியன் அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்.

"இறக்குமதி பற்றி கடுமையான கண்காணிப்பு இருக்க வேண்டியதுதான் என்றாலும், தென்னாட்டில் விவசாயக் காரியங்களுக்காகத் தேவைப்படுகிற மின்சார மோட்டார்களின் இறக்குமதியைத் தடுக்கவோ குறைக்கவோ கூடாது.

"சென்னை சர்க்கார், சுமார் 15,000 மோட்டார்கள் இறக்கு

(4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 28—8—57 புதன்

எண்ணெய்ச் செலவுதான்!

இந்தியப் பேரரசின்கீழ் பணிபுரிந்துவரும் ஊழியர்களுக்குத் தரப்பட்டுவரும் சம்பள விகிதம், தங்களுடைய அன்றாட வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யக்கூடியதாக இல்லை என்று ஊழியர்கள் குரலெழுப்பி வருகின்றனர். அவர்கள் குரல் கேட்டுப் பேரரசு, நேற்றுவரை அசைந்து கொடுக்கவில்லை.

அரசாங்கத்தின் பிடிவாதத்தைக்கண்டு, தங்கள் தேவைகளைப் பூர்த்திச் செய்து கொள்வதற்காக அறப்போரில் ஈடுபட அவர்கள் முடிவுகட்டினர். அதற்கான நாளையும் குறிப்பிட்டுவிட்டனர்.

நிலைமை கட்டுக்கடங்காது முற்றிவிட்டது என்பதைத் தெரிந்துகொண்ட பேரரசு, ஊழியர்களின் விருப்பத்திற்கிணங்க வேண்டா வெறுப்பாக முன்வந்தது. அதன் பலனாக, இரண்டாவது ஊதிய ஆய்வுக் குழுவும் உருவெடுத்துள்ளது.

ஆய்வுக் குழுவின் இறுதியான முடிவு, ஊழியர்கள் எதிர்பார்க்கின்றபடி இருந்தாலும் இருக்கக்கூடும்; அல்லது இல்லாமலும் இருக்கக்கூடும். அதன் முடிவை எவ்வளவுதான் குறைத்து மதிப்பிடுவதானாலும், ஊழியர்களின் கோரிக்கைகளைக் குறைந்தபட்சமாவது நிறைவேற்றிவைக்கக் கூடியதாக, அக்குழுவின் முடிந்த அறிக்கை இருக்கும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே.

இந்தியப் பேரரசின்கீழ் பணிபுரிந்து வருகின்ற ஊழியர்களின் ஊதிய நிலையே மேலானது எனக் கூறத்தகும் நிலையில், மாநில அரசாங்க ஊழியர்களின் சம்பள விகிதம் படுமோசமாக இருந்துவருகிறது என்பது நீண்ட நாளைய குற்றச்சாட்டாகும். இந்த ஊதிய வேற்றுமை, பேரரசு—மாநில அரசாங்கம் என்ற நிலையுடனும் இருக்கவில்லை.

மாநிலங்களுக்குள்ளாக இத்துறையில் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டு இருக்கின்றது. மைசூர் அரசாங்கம் தனது ஊழியர்களுக்கு, சென்னை அரசாங்கம் தனது ஊழியர்களுக்கு வழங்கிவரும் ஊதியத்தையும் விட குறைவாகக் கொடுத்து வருகிறது. அதுபோன்றே, ஆந்திர அரசாங்க ஊழியர்களுக்கும் கேரள அரசாங்க ஊழியர்களுக்கும் ஊதியத்தில் வேற்றுமை இருந்துவருகிறது.

இந்த வேற்றுமைகள் தொலைக்கப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து மாறுபாடு இருக்க நியாயமே கிடையாது. அரசாங்க ஊழியர்கள், இந்தியப் பேரரசைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மாநில அரசாங்கங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் பெறும் ஊதியத்தில் சமநிலை இருந்தாக வேண்டும்.

'ஒத்தப் பணிக்கு ஒத்த சம்பளம்' தரப்பட வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டம் அறிவுரை வழங்கியுள்ளது. அதற்கு மதிப்பளித்தாவது பேரரசும், மாநில அரசாங்கங்களும், தங்கள் ஊழியர்கள் சம்பள விகிதத்தில் சமநிலையைப் புகுத்த முன்வர வேண்டும்.

முதல் சம்பளக் குழு தனக் கிடப்பட்டிருந்த ஆணைப்படி, மாநில அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத் துறையில் சில சிபார்சுகளைச் செய்தது. ஆனால், அச்சிபார்சுகளோ, அக்குழுவின் அறிக்கையை அலங்கரித்துக் கொண்டிருப்பதோடு அமைந்துவிட்டது. நிற்க,

இரண்டாவது சம்பளக் குழுவின் ஆய்வுக்கு தங்களுடைய குறைகளை ஒப்படைக்க வேண்டும் என்று சென்னை, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய நான்கு தென்னக அரசாங்க ஊழியர்களும், டெல்லியில் இந்தியப் பிரதமரைக் கண்டு வேண்டியுள்ளனர். அதற்கு இந்தியப் பிரதமரோ, ஊழியர்களின் சம்பள கோரிக்கை நியாயமானது என ஒப்புக்கொண்ட அளவுடன் இருந்துவிட்டார். ஊழியர்களின் மற்றொரு கோரிக்கையான இரண்டாவது சம்பளக் குழுவின் ஆய்வுக்குத் தங்களுடைய பிரச்சினைகளை விடவேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இந்தியப் பிரதமர் இணங்க மறுத்துவிட்டார். ஆனால், குழுவின் அறிக்கை வெளிவருவதில் காலதாமதம் ஆகக்கூடும் என நயமாக எடுத்துக்கூறி, ஊழியர்களின் இரண்டாவது விருப்பத்தை மறுத்துவிட்டிருக்கின்றார், இந்தியப் பிரதமர்.

இரண்டாவது ஆய்வுக்குழு, மாநில அரசாங்கங்களை இந்த நிலையிலேயே கலந்துகொண்டு தங்கள் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணமுடியும் என்றும், தங்கள் பிரச்சினைகளில் முடிவு காணா பின்னராவது தனி ஏற்பாடு ஒன்று வேண்டும் என்றும் தென்னக ஊழியர்கள் சார்பில் கோரப்பட்டது. அதற்கு 'ஆகட்டும்—பார்க்கலாம்' என்று இந்தியப் பிரதமர் பதிலளித்தார் என நம்பப்படுகிறது.

'நகை செய்பவனிடம் தானுக நாள் வைத்து வருவது' என்று ஒரு மொழி வழக்கில் இருந்து வருகிறது. அதையே பின்பற்றி தென்னக அரசாங்க ஊழியர்களும், இந்தியப் பிரதமரைக் கண்டு நாள் வைத்துத் திரும்பி வந்திருக்கின்றனர் என்பதைத் தவிர்த்து, அவர்கள் செயலுக்கு வேறு ஒன்றும்கூறுவதற்கில்லை. ஏற்கனவே ஒருமுறை, தங்கள் குறைகளை இந்தியப்பிரதமரிடம் கூறி பரிகாரம் பெறலாம் என்ற திட நம்பிக்கையில், சென்னை அரசாங்க சார்பில் தூதுக்குழு ஒன்று டெல்லிக்குக் கால்கடுக்கச் சென்றது. அத்தருணம், ஊழியர்களைப் பார்க்கவே முடியாது என்று ஒரேபடியாக மறுத்துவிட்டார் பிரதமர் என்பதை எவரும் மறந்திருக்க நியாயமில்லை.

ஆனால் இப்பொழுதோ, இந்தியப் பிரதமர் நேரு பெருமகனைக் காண்பதற்கும், அவருடன் உரையாடுவதற்கும் தென்னக அரசாங்க ஊழியர்களின் தூதுக் குழுவிற்கு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. சோரிப் போனது கிடைக்கவில்லையானுலும், பிரதமரைக் காணும் பேறும், தனித்து உரையாடும் பெரும் பேறும் கிடைத்தமைக்காக, தூதுக் குழுவினரில் சிலர், தங்களைத் தாங்களே பாராட்டிக்கொண்டாலும், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், நேருபெருமகனைக் கண்ட பிறகும், அவருடன் பேசிய பிறகும், தங்கள் வாழ்க்கைச் சுமை இறக்கப்படாமல் என்றும் போல் தங்கள் முதுகைக் கூனச் செய்து வருகின்ற அவலட்சணத்தை, ஊழியர்கள் உணரும்பொழுதுதான், டில்லிக்குச் சென்று கால்கடுப்புடன் திரும்பினதுதான் கைமேல் கிடைத்த பலன் என்ற உண்மை அவர்களுக்குத் தெளிவாகப் புலனாகக்கூடும்.

மாநில அரசாங்க ஊழியர்களின் நீண்ட நாளைய அல்லலையும், டெல்லிக்குத் தூது சென்று மீண்டும் மீண்டும் ஏமாற்றத்துடன் திரும்பிவரும் போக்கையும், பார்க்கின்ற எவரும், 'எண்ணெய்ச் செலவே ஒழிய பிள்ளை பிழைத்த பாடில்லை' என்றுதான் முடிவு கட்டிக் கொள்ளுவர்.

கால்வாய் கட்டண பாக்கி ரூ. 89 இலட்சமாம்!

பாகிஸ்தான் செலுத்தாததற்குக் காரணம் என்ன?

கால்வாய் தண்ணீர் பாக்கியாக 1950-லிருந்து இதுவரை பாகிஸ்தான் இந்தியாவுக்கு ரூ. 89 இலட்சம் தரவேண்டியிருக்கிறது என்றும், வட்டி விகிதம் விதிப்பதிலும், மொத்த பாக்கியை நிர்ணயிப்பதிலும் இருநாடுகளுக்கிடையே கருத்து வேற்றுமை இருப்பதே பாகிஸ்தான் பாக்கி செலுத்தாததற்குக் காரணம் என்றும் மக்கள் சபையில் மத்திய பாசன-மின்சார இலாகா உதவி அமைச்சர் கூறியுள்ளார்.

'பாக்கியை வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?' என்று கேட்டதற்கு, 'பாகிஸ்தான் அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்து நடைபெறுகிறது' என்று பதிலளித்துள்ளார்.

காஷ்மீரில் பாக். அணை

பாதுகாப்பு சபைத் தலைவரிடம் இந்தியா புகார்

புதுடில்லி, ஆக. 26—

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் சர்க்காரால் கட்டப்படத் திட்டமிடப்பட்டிருக்கும் 'மங்களா' அணைக்கட்டுபற்றி மக்கள் சபையில் ஒரு அவசரக் கேள்வி எழுப்பப்பட்டது.

"இதுபற்றி பாகிஸ்தானிடம் இந்திய சர்க்கார் நேரிடையாக எதுவும் சொல்லவில்லை. அப்படிச் சொல்வதால் பயனில்லை என்பதை நாம் நன்றாக அனுபவத்தில் கண்டிருக்கிறோம்" என்று நேரு பதிலளித்துவிட்டு, மேலும் கூறுகையில், 'ஐ. நா.-விலுள்ள இந்தியப் பிரதிநிதி இதுபற்றி பாதுகாப்பு சபைக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும், இன்னும் பதில் கிடைக்கவில்லையென்றும், பாதுகாப்பு சபையில் இப்பிரச்சினையை எழுப்பும் நோக்கம் சர்க்காருக்கு இல்லையென்றும் விளக்கியிருக்கிறார்.

நகரசபை நடவடிக்கைகள் தமிழிலேயே நடைபெறும்

சென்னை நகரசபை ஒருமித்த முடிவு

சென்னை, ஆக. 27—

சென்னை நகரசபையின் நடவடிக்கைகள் அனைத்தும் இனித் தமிழிலேயே நடைபெறும்.

நேற்று நடைபெற்ற நகரசபை கூட்டத்தில் இதுபற்றி முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

சபையின் அலுவல்கள் தமிழிலேயே நடத்தப்பட வேண்டுமென்றும், ஆனால், மேயரின் அனுமதியின்பேரில், எந்த ஒரு உறுப்பினரும் அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட எந்த மொழியிலோ அல்லது ஆங்கிலத்திலோ பேசலாம் என்றும், அப்படி அனுமதி கோரும் உறுப்பினருக்குத் தமிழில் நன்றாகப் பேசத் தெரியாது என்ற திருப்தி மேயருக்கு ஏற்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

நிகழ்ச்சி நிரலும் (அஜண்டா), குறிப்புகளும் இனி தொடர்ந்து ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் வழங்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இணைப்புப் பேச்சு முறிந்ததேன்?

ஜெயப்பிரகாசர் விளக்கம்

கயா, ஆக. 27—

தனித்தனியே இயங்கிவரும் சோஷலிஸ்டு—மக்கள் சோஷலிஸ்டு கட்சிகளை ஒன்றாக இணைக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் முறிந்தன வென்பது தெரிந்த ஒன்றாகும். அந்தப் பேச்சு முறிவு பற்றி ஜெயப்பிரகாஷ்நாராயணன் விளக்கம் தந்துள்ளார்.

'இரு கட்சிகளையும் ஒன்றாக இணைக்கும் முயற்சிகள் பயனடையவில்லை. இருப்பினும், இரண்டு கட்சிகளும் ஒன்றாக இனி நெருங்கி வரவேண்டும் என்றே நான் விரும்புகிறேன். என்னுடைய சொந்தப் பொறுப்பில், நான் டாக்டர் லோகியாவுடன் கலந்து பேசினேன்; அதைப் பற்றி ஆராய்வது தவறென்று நான் கருதுகிறேன்"

இதைப் பற்றி அசோகாமேதாவின் கருத்தும் வெளியாகியுள்ளது.

"இரண்டு கட்சிகளும் ஒன்றாக இணைவதை நான் வரவேற்கிறேன். கொள்கை காரணமாக டாக்டர் லோகியா பிரிந்து செல்லவில்லை. கட்சி எப்படி வேலை செய்ய வேண்டும் என்பதில்தான் வேற்றுமை ஏற்பட்டது. ஜெயப்பிரகாசர் மீண்டும் முயற்சி செய்து, தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி நல்ல பலன் ஏற்படச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

தமிழ் நாட்டுக்கு ஒன்றுமில்லை!

புதுடில்லி, ஆக. 26—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 60 கோடியில் மாநிலங்களுக்குரிய பங்குகள் பற்றி மத்திய வெள்ளத் தடுப்பு நிறுவனம் முடிவு செய்திருக்கிறது.

இதன்படி பீகாருக்கு ரூ 19 கோடி; உத்திரப்பிரதேசத்துக்கு ரூ. 9 கோடி; மேற்கு வங்கத்திற்கு ரூ. 7 கோடி; ஆந்திராவுக்கு ரூ. 3 கோடி; மைசூருக்கு ரூ. 40 இலட்சம்; கேரளத்திற்கு ரூ. 1 கோடி கிடைக்குமாம்.

ஆனால் தமிழ் நாட்டுக்கு ஒரு ஆயிரம் ரூபாய்கூட ஒதுக்கப்படவில்லை; தமிழ்நாட்டில் அடிக்கடி வெள்ளம் ஏற்படும் ஆறுகள் எதுவும் இல்லாததே இதற்குக் காரணமாம்!

நகரசபை ஊழியர்களுக்கு கிராக்கிப்படி உயர்வு!

சென்னை, ஆக. 27—

மாநில அரசாங்கம் நிர்ணயித்துள்ள கிராக்கிப்படி விகிதப்படி, சென்னை நகரசபையில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் கிராக்கிப்படி அளிக்கப்படலாம்.

ஆண்டுதோறும் ரூ. 10 இலட்சம் இதற்காக மானியமாகக் கிடைக்கக்கூடும் என்றும் நகரசபை ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கம் தரும் முழுத்தொகையான ரூ.12 லட்சமும் சென்னை நகர சபைக்குத் தரப்படுமாம்.

கிராக்கிப்படியை உயர்த்துவதனால் அதிகம் செலவானால், அந்த அதிகப்படி தொகையை நகரசபை, தனது நிதியிலிருந்தே ஈடு செய்துகொள்ள வேண்டும் என்றும் சென்னை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சென்னை மாநிலத்தில் சிறு கைத்தொழில்கள்!

டில்லி தரும் உதவியின் இலட்சணம்

புதுடில்லி, ஆக. 27—

வார்ப்புப் பட்டறை, கருவிகள் பட்டறை, விளையாட்டு பொருள்கள், வைத்தியக் கருவிகள், பழுதுபார்க்கும் சிறு தொழிற்சாலை, தொழில் நுணுக்கங்கள் பற்றிய தகவல் தரும் நிலையம்—இத்தனையும் சென்னை கிண்டியில் ஏற்படுத்தப்படுமாம்!

சேலம், ஈரோடு, மதுரை, பல்லாவரம், பொம்பூர், ஆம்பூர் ஆகிய இடங்களில் செருப்புத் தொழிற்சாலைகள் அமைக்கப்படுமாம்.

தோல் கெட்டுப்போகாமல் பாதுகாக்க ஆம்பூரில் குளிர் சாதன அறைகள் அமைக்கப்படுமாம்.

ஸ்ரீபெரும்புதூரில் மரை, திருகாணி இவைகளை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படும்.

சுண்ணாம்புக் கற்களை இடிக்கும் தொழிற்சாலையொன்று சேலத்தில் ஏற்படுத்தப்படும்.

இராசபாளையம், வேலூர் பகுதியில் உள்ள தொழிற்சாலைகள், குடந்தையில் உள்ள பித்தளைப் பாத்திரம் பழுதுபார்க்கும்நிலையம், மேட்டூரில் உள்ள 'கால்வனைசிங்' பட்டறை, விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் பயிற்சி நிலையம், திருநெல்வேலியில் உள்ள தச்சு, கருமான் பட்டறைகள் ஆகியவை தொடர்ந்து நடத்தப்படுமாம்.

குலசேகரப் பட்டினத்தில் உள்ள 'பிரஷ்' தொழிற்சாலையும், கீழ்க்கரை வேதாரண்யத்திலுள்ள 'ஆடைகள் தயாரிப்பு' உற்பத்தி நிலையமும், சென்னையில் உள்ள கண்ணாடி உற்பத்திப் பயிற்சி நிலையமும் விரிவாக்கப்படுமாம்.

இதைத் தவிர, சென்னையிலுள்ள பெண்கள் கூட்டுறவு குடிசைத் தொழில்கள் ஊக்குவிக்கப்படுமாம்.

சென்னை மாநிலத்தின் சிறு தொழில்கள் முன்னேற்றத்திற்காக மத்திய அரசாங்கம் ரூபாய் $12\frac{1}{2}$ இலட்சம் கடனாகத் தந்துள்ளதாம்; ரூ. $4\frac{1}{2}$ இலட்சம் மட்டுமே மானியமாகத் தர இசைந்துள்ளதாம்.

வியாசர்பாடி மக்கள் மறுமலர்ச்சி மன்றப் பொதுக்கூட்டம்

சத்தியவாணிமுத்து, கண்ணதாசன் கலந்துகொண்டனர்

சென்னை, ஆக. 27—

சென்னை—வியாசர்பாடி, மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் 17—8—57 மாலை 6-30 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் க. அன்பிற்கரசு தலைமை வகித்தார்.

தோழர் ஆர். ஜார்ஜ் பேசுகையில், தி. மு. கழகம் ஓர் விடுதலை இயக்கம் என்றும், அதை அழித்துவிட யாராலும் முடியாது என்றும், நமது இலட்சியத்தை முன்பு எதிர்த்தவர்களெல்லாம் இன்று ஒப்புக்கொள்ள முன்வந்திருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து, தோழர் வி. எஸ். கோவிந்தராசன் பேசுகையில், இந்த நாட்டில் எல்லாத்துறையிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருவது தி. மு. கழகம் ஒன்றுதான் என்றும், சமூக—அரசியல்—பொருளாதாரத் துறைகளில் மறுமலர்ச்சி காண விழையும் ஒரே கட்சி தி. மு. கழகம் என்றும் குறிப்பிட்டார்.

தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. அவர்கள் பேசுகையில், தம் தொகுதியில் குடிதண்ணீர் வசதியின்மை குறித்து சட்ட சபையில் எடுத்துக் கூறியது குறித்தும், அதற்கு அமைச்சர் அளித்த குறும்புத்தனமான பதில் குறித்தும், சுகாதார அமைச்சர் லூர்து அம்மையாரைத் தம் தொகுதியில் அழைத்துவந்து சுகாதார வசதியற்ற இடங்களைக் காட்டியபோது, அந்த அமைச்சரே வியக்கக்கூடிய அளவுக்கு நிலைமை மோசமாகஇருந்ததையும் சுட்டிக் காட்டினார்கள்.

இத்தொகுதியிலுள்ள குறைபாடுகள் பலவற்றையும் அமைச்சர்களிடமும் சட்ட சபையிலும் பலமுறை எடுத்துக் கூறியிருப்பதாகவும், இனிமேலும் பல குறைபாடுகளை எடுத்துச் சொல்லப் போவதாகவும் குறிப்பிட்டார்கள்.

வியாசர்பாடிக்கு பஸ் போக்குவரத்து வசதியின்மை குறித்துத் தம்மிடம் கொடுக்கப்பட்ட ஒரு மகசருக்கு, தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார், தன்னால் முடிந்தவரை முயன்று ஆவன செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள்.

அம்மையாருக்குப் பல சங்கங்கள் சார்பிலும், தனிப்பட்டோர் சார்பிலும் மாலைகளும், கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பட்டன.

தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் தொடர்ந்து பேசுகையில், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் நூற்றாண்டுவிழா என்று சொல்வது பொருத்தமில்லையென்றும், 150 ஆண்டுகளுக்கு முன்பே தென்னாட்டில் வெள்ளையரை எதிர்த்து வேலூரில் இராணுவப் புரட்சி நடந்திருக்கிறது என்றும், சிவகங்கையில் மருது சகோதரர்களும், மற்றும் கட்டபொம்மன், ஊமைத்துரை போன்ற வீரர்களும் செய்த புரட்சியை எடுத்துக் காட்டியும் பேசியதுடன், இந்தித் திணிப்பை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்கள்.

இறுதியாகத் தோழர் கண்ணதாசன் அவர்கள் பேசுகையில், நேரு காலத்திலேயே திராவிட நாடு பெறவேண்டுமென்றும், அதுவும் அண்ணாவின் தலைமையில் நடக்கும் விடுதலைப் போராட்டத்தினால்தான் முடியும் என்றும், இந்த நாட்டில் அண்ணா அவர்களின் பேச்சாலும், எழுத்தாலும்தான் தமிழ் மறுமலர்ச்சிபெற்றது என்றும் குறிப்பிட்டுவிட்டு, வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத்தைக் கண்டித்துப் பேசினார்கள்.

தோழர் தாசப்பன் அவர்களின் ஆண் மகவுக்கு 'மருதப்பன்' என்று தோழர் கண்ணதாசனால் பெயரிடப்பட்டது.

கூட்டத்தில் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு ஆணித்தரமாக பதில் கூறப்பட்டது.

இறுதியாக நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

காஷ்மீருக்கு டில்லி அளித்த கடன்

ஸ்ரீநகர், ஆக. 25—

காஷ்மீரின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக இந்திய அரசாங்கத்திடமிருந்து 1947-ம் ஆண்டுமுதல் 1956-ம் ஆண்டுவரை ரூ. 18 கோடிக்கும் அதிகமாகக் கடன் கிடைத்திருக்கிறது என்று காஷ்மீர் பிரதமர் குலாம் பக்ஷி தெரிவித்திருக்கிறார்.

டி.கே.எஸ். நாடகக் குழுவினருக்கு தென்னிந்திய நடிகர் சங்கப் பாராட்டு விழா

சென்னை, ஆக. 26—

மலேயா சென்று 4 மாத காலம் அங்கு கலைப் பணியாற்றித் திரும்பியுள்ள நாடகக் கலைஞர்களான டி. கே. எஸ். குழுவினருக்கு நேற்று காலை, மயிலை ரசிக ரஞ்சனி சபா மண்டபத்தில் தென்னிந்திய நடிகர் சங்கச் சார்பில் ஓர் பாராட்டு விழா நடைபெற்றது.

நடிகமணி டி. வி. நாராயணசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

சட்டமன்றத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணராவ் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் டி. கே. எஸ். குழுவினரின் கலைப் பணியைப் பாராட்டினர்.

டாக்டர் மு. வரதராசனர், டி. கே. எஸ். குழுவினரைப் பாராட்டிப் பேசுகையில், 'நாடகக் கலை, மக்களுக்கு கல்வி போதிக்கக் கூடிய சிறந்த சாதனம்' என்றார்.

மற்றும் எஸ். டி. சுந்தரம், பி. டி. சம்பந்தம், எம். எம். சிதம்பரம், பிரண்ட் இராமசாமி, மேயர் கே. என். சீனிவாசன், டைரக்டர் கே. சுப்பிரமணியம், பிரதம மாகாண மாஜிஸ்திரேட் அய்யாசாமி செட்டியார், நடிகை எம். என். ராஜம் ஆகியோர் டி. கே எஸ். குழுவினரைப் பாராட்டிப் பேசினர்.

டி. கே.எஸ் குழுவைச் சேர்ந்த டி. என். சிவதாணு பேசுகையில் இன்னும் அதிகமான அளவுக்குத் தமிழக நடிகர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று தமிழர் கலாச்சாரத்தைப் பரப்ப வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

துவக்கத்தில், டி. கே. எஸ். குழுவினருக்குப் பல்வேறு நாடக மன்றங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இறுதியில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் நன்றி கூற, திருச்சி லோகநாதன் இன்னிசைக்குப்பின் விழா முடிவுற்றது.

துப்பாக்கிப்பிரயோகம்

சேலம் நகரசுத்தித் தொழிலாளர் கண்டனம்

சேலம், ஆக. 23—

சேலம் நகராண்மைக் கழக நகரசுத்தித் தொழிலாளர் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் தோழர் பி. முத்துசாமி தலைமையில் நடைபெற்றது.

நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடிய டெல்லி நகரசுத்தித் தொழிலாளர்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததைக் கண்டித்தும், சேலத்தில் பீடித் தொழிலாளர்கள் நடத்தும் போராட்டத்தை ஆதரித்தும், பீடித் தொழிலாளர்கள் போராட்ட நிதிக்கு ரூ. 25 நிதி கொடுக்க முடிவு செய்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

மலேரியா, கம்போஸ்ட் முதலியவைகளில் வேலை செய்யும் நகரசுத்தித் தொழிலாளிகளுக்கு சோப்பு, எண்ணெய் முதலியன கொடுக்குமாறும், எல்லா நகரசுத்தித் தொழிலாளிகளுக்கும் ஆண்டு ஒன்றிற்கு இரண்டு ஜதை செருப்புகள் கொடுக்குமாறும் சேலம் நகராண்மைக் கழகத்தைக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேறின

இந்தியப் பேரரசின் அவா!

புதுடில்லி, ஆக. 26—

ஆண்டுதோறும் ரூ. 1,000 கோடி மதிப்புக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று சர்க்கார் விரும்புவதாக வர்த்தக அமைச்சர் கனுங்கோ, மக்கள்சபையில் தெரிவித்தார்.

திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்ட முடிவு விவரம்

திருச்சி மாவட்டத் தி. மு. கழகச் செயற்குழுவின் அவசரக் கூட்டம், 25—8—57 பிற்பகல் 3 மணிக்கு, குளித்தலையில், மாவட்டச் செயலாளர் அன்பில்-தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மொத்தம் 63 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

நங்கவரம் விவசாயிகள் தங்கள் உரிமை கோரி நடத்தும் அறப்போராட்டம் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு தருவது பற்றியும் எடுத்துச் சொல்லப்பட்டு, உறுப்பினர்களின் கருத்தறியப்பட்டுக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன :—

"குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்றச் சங்கம், தங்கள் சாகுபடி உரிமை கோரி நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்தி, வழக்கம்போல் விவசாயம் செய்ய நீதி வழங்க வேண்டுமென்று சென்னை விவசாய அமைச்சரை, குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில், மாவட்டச் செயலாளர் அன்பில்-தர்மலிங்கம், குளித்தலை வட்டம் விவசாயிகள் முன்னேற்றச் சங்கத் தலைவர் முத்துகிருஷ்ணன், கவுண்டம்பட்டி முத்து ஆகியோர் சென்னையிலும் கல்லணையிலும் இறுதியாக குளித்தலையிலும் சந்தித்து நிலைமையைத் தெளிவாக எடுத்துக் கூறியும் பயன் அளிக்காதது கண்டு இக்குழு வருந்துவதோடு, நியாயம் வழங்கத்தவறிய சென்னை சர்க்காரின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது."

"நங்கவரம் விவசாயிகளின் நியாயமான அறப்போராட்டத்தை இழித்தும், பழித்தும், திரித்தும் பேசியும்வரும் சென்னை அமைச்சர்களின் போக்கையும், உண்மையைத் திரித்துத் தவறாக வெளியிடும் ஒருசில செய்தித்தாள்களின் போக்கையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

"நங்கவரம் விவசாயிகள் முன்னேற்ற சங்கம் தங்கள் உரிமை கோரி நடத்திவரும் அறப் போராட்டத்திற்கு; திருச்சி மாவட்ட தி. மு. க. தனது ஆதரவை அளிப்பதோடு, தேவைப்பட்டால் நமது மாவட்டத்திலுள்ள கிளைகளின் மூலம் இரண்டாயிரம் தொண்டர்களை அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

'குளித்தலை வட்ட நங்கவரம் விவசாயிகளின் அறப்போராட்டத்தைக் கவனிக்கவும், அவ்வப்போது வேண்டிய நடவடிக்கைகளை உருவாக்கவும், அவசியப்பட்டால், அறப்போருக்கான நிதியை, மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்களின் மூலம் வசூலிக்கவும், கீழ்க்கண்ட குழுவைத் தேர்ந்தெடுக்கிறது :—

மு. கருணாநிதி —தலைவர்

அ. பெ. தர்மலிங்கம்
எம். எஸ். மணி
—அமைப்பாளர்கள்

மு. பெ. முத்துக்கருப்பன்
ஏ. எஸ். கணபதி
வி. கே. இராசு
அரு. ஆதிமூலம்

தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு மாவட்டச் செயலாளர் நன்றி கூறியபின், தோழர் மு. கருணாநிதி விளக்கவுரை ஆற்றியபின் கூட்டம் இனிது முடிந்தது. (ந. நி.)

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணப்பித்துக் கொள்க :

பூதலூர்
அறந்தாங்கி
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேலூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)

—நிர்வாகி : 'நம் நாடு'

சோறு சமைக்க புதுவகை அடுப்பு

புது அரிசியை நன்கு சமைப்பதற்கு ஏற்ற புதுவகை அடுப்பு ஒன்றை மத்திய உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் உருவாக்கி இருக்கிறது என்றும், அதில் சமைக்கிற சோறு சாதாரணமாகப் புதிய அரிசியை சமைக்கும்போது கிடைக்கிற சோற்றைப்போல் பசையாகக் குழைந்துவிடாமல் இருக்குமென்றும், அதில் பி-1 வைட்டமின் சத்துக்கள் அதிகமாகத் தங்கியிருக்குமென்றும் விஞ்ஞான—தொழில் ஆராய்ச்சித் துணை மந்திரி டாக்டர் எம். எம். தாஸ் மாநிலங்கள் சபையில் கேள்வி நேரத்தில் தெரிவித்தார். இந்தப் புதுவகை குக்கர் அடுப்பின் விலை—2 பவுண்டு சமைக்கக்கூடியது ரூ. 11.

மத்தியதரைக் கடலில் ரஷ்யப் போர்க்கப்பல்கள்

ஜிப்ரால்டர், ஆக. 27—

'மிக்கல் காட்டர்'!

இதுதான் சோவியத் போர்க் கப்பல்!

விளக்கில்லாமலும், அடையாளம் தெரிவிக்காமலும், 'மிக்கல் காட்டர்' ஜிப்ரால்டர் வழியாக மத்தியதரைக் கடலில் நுழைந்ததாம்; அத்துடன் ஒரு நாசகாரி கப்பலும் சென்றதாம்!

இந்த இரண்டு கப்பல்களும் அல்பேனியாவுக்கு சென்று கொண்டிருப்பதாக 'சோவியத் கடற்படை' என்னும் பத்திரிகை அறிவித்துள்ளதாம்!

பீடித் தொழிலாளர்

அறப்போர் : வாபஸ் பெற முடிவு

சேலம், ஆக. 26—

சேலம் ஐக்கிய பீடித் தொழிலாளர்கள் சங்கப் பொதுக்குழுக் கூட்டம் சங்க உதவிச் செயலாளர் எஸ். ரமணி தலைமையில் 25-ந் தேதி மாலை நடைபெற்றது. தோழர்கள் கே. செல்லப்பன், எஸ். எம். ராமையா, மற்றும் பலர் பேசினர்.

பீடித் தொழிலாளர்களின் போராட்டக் கோரிக்கைகளைத் தீர்க்க சர்க்கார் தலையிட்டு நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வதாக லேபர் கமிஷனர் கூறியதன் பேரில், பீடித் தொழிலாளர்களின் அறப்போரை வாபஸ்பெற முடிவு செய்யப்பட்டது.

சேலம் நகரிலும், தம்மம்பட்டியிலும் கைது செய்யப்பட்ட பீடித் தொழிலாளர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு சேலம் மாவட்ட கலெக்டரையும், சென்னை அரசாங்கத்தையும் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேறியது.

சமரசப் பேச்சுக்கு வர மறுத்த முதலாளிகள்மீது நடவடிக்கை எடுக்குமாறும் சென்னை அரசாங்கத்தைக் கோரி மற்றொரு தீர்மானம் நிறைவேறியது. (ந-நி.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வடாற்காடு மாவட்ட

தி.மு. கழக 3-வது மாநாடு

★

1957 செப்டம்பர் 21, 22 சனி, ஞாயிறு கிழமைகளில்

திருவண்ணாமலையில்

நடைபெறும்

★

21—9—'57 சனியன்று

இந்தி பொது மொழி எதிர்ப்பு மாநாடு

22—9—'57 ஞாயிறன்று

கழகப் பொது மாநாடு

★

மற்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்

—வரவேற்புக் குழு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'அயல்நாட்டுச் சீனர்கூட வரவேற்கின்றனர்; ஆனால் வடநாட்டவர் மதிப்பதில்லையே'

'தமிழர் வாழும் தென்கிழக்கு நாடுகளில் தமிழரே தூதுவராக நியமிக்கப்படவேண்டும்'

வரவேற்புக் கூட்டத்தில் டி. கே. சண்முகம் பேச்சு

சென்னை, ஆக. 28—

"மலாயாவில் வாழும் சுமார் ஏழு இலட்சம் தமிழர்களில் ஆறு இலட்சம் பேர் தங்கள் தாயகத்தையே காணாதவர்கள்; அவர்கள், தங்கள் தாயகமாம் தமிழகத்தைப்பற்றி அறிய மிக ஆவல் கொண்டவர்களாயுள்ளனர்; எனவே, இந்திய சர்க்கார் உடனடியாகத் தமிழகக் கலைஞர்களைக் கொண்ட தூதுக்குழு ஒன்றை அந்த நாட்டிற்கு அனுப்பவேண்டியது அவசியமாகும். இந்த அவசியத்தை மத்திய சர்க்கார் உணருமாறு செய்யவேண்டியது இந்த மாநில சர்க்காரின் பொறுப்பாகும்.

"மேலும், தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குத் தமிழர்கள், தூதுவர்களாக நியமிக்கப் படாதது வருந்தத்தக்கதாகும்"

—என்று டி. கே. சண்முகம் அவர்கள், தென்னிந்திய நடிகர் சங்க வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"மலாயாவில் எங்கள் நாடகக் குழுவிற்கு அங்குள்ள தமிழ் மக்கள் மட்டுமல்ல—சீனக் கலைஞர்கள்கூட மகத்தான வரவேற்புத் தந்தனர்; ஆனால் பம்பாய் போன்ற வடநாட்டு நகரங்களுக்கு நாங்கள் சென்றபோது, அங்குள்ள தமிழர்களைத் தவிர வேறெவரும் எங்களை வரவேற்கவில்லை.

"நாட்டின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறவர்கள், உள்நாட்டில் வாழும் மக்களிடையே, ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வதற்கும் வழி செய்தாக வேண்டும்.

"ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கு மிடையே கலாச்சாரத் தொடர்புகள் ஏற்படுவதற்கு உடனடியாக வழி செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது.

"அதேநேரத்தில், இந்தியாவிலிருந்து அன்னிய நாடுகளுக்கு அனுப்பப்படும் கலாச்சாரத் தூதுக்குழுக்களில் தமிழகக் கலைஞர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் தரப்படுவதில்லை. இந்த நிலைகளை நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், குறைகள் களையப்பட வேண்டும் என்பதுதான்.

"இல்லாவிட்டால், பிரிவினை இயக்கங்கள் பெரும் கிளர்ச்சிகளின்றியே நாட்டில் வேகமாக வளருவதற்கு வழி ஏற்படும்.

"நாட்டின் ஒற்றுமையில் நம்பிக்கை கொண்டவர்கள், மாநிலங்களுக்கிடையேகலாச்சாரத் தூதுக் குழுக்கள் பரிமாற்றத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும்."

தென் மாநிலங்களின் என். ஜி. ஓ.-க்கள்

ஓரணியாகக் கூடுகின்றனர்

புதுடில்லி, ஆக. 28—

இந்தியத் துணைக்கண்டத்தின் தென் பகுதியிலுள்ள சென்னை, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த அரசாங்க (கெசட் பதிவில்லாத) ஊழியர்களின் சங்கங்களை இணைத்து ஒரு கூட்டு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாநில அரசாங்க ஊழியர்களின் ஊதியப் பிரச்சினையையும் மத்திய ஊதியக் குழு கவனிக்க வேண்டுமென்று மத்ய அரசாங்கத்திடம் வற்புறுத்த தென் மாநிலங்களின் என். ஜி. ஓ.-க்கள் சங்கப் பிரதிநிதிகள் புதுடில்லி வந்துள்ள செய்தி முன்பே வெளியாகியுள்ளது.

இந்தப் புதிய கூட்டு அமைப்பின் முதல் மாநாடு ஐதராபாத்தில் செப்டம்பர் திங்களில் நடைபெறும் என்று தெரியவருகிறது.

உழைக்கும் பத்திரிகையாளர் புதிய சம்பள விகிதம்

1957 மே முதல் அமுல் நடத்த உத்தரவு

புதுடில்லி, ஆக. 27—

உழைக்கும் பத்திரிகையாளரின் நிலைமையைக் கண்டறிந்து அவர்களுக்கு நியாயம் வழங்கும் பொருட்டு இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஊதியக் குழு தனது முடிவுகளை வெளியிட்டதும், அம்முடிவுகளை மத்திய அரசாங்கம் அமுலுக்குக் கொணர்ந்ததும் நினைவிருக்கலாம்.

இந்தக் குழுவின் முடிவுகளை எதிர்த்து பத்திரிகை முதலாளிகள், சட்டப்படி மனுச் செய்து கொண்டனர்.

இதுபற்றி இந்திய சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு வழங்கியுள்ளது.

உழைக்கும் பத்திரிகையாளர் ஊதியக் குழுவின் முடிவுகளை 1957 மே மாதத்திலிருந்து அமுல் நடத்தவேண்டும் என்றும், 1956 மே முதல் 1957 மே வரை உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு, குழுவின் முடிவுகள்படி தரவேண்டிய தொகையை வழக்கின் இறுதித் தீர்ப்பு கிடைக்கும் வரை நிறுத்திவைக்குமாறும் சுப்ரீம் கோர்ட்டு இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த அப்பீல் மனுவின் இறுதி விசாரணை அக்டோபர் 29-ந் தேதி நடைபெறும்.

புண்ணியத்தைக்கூட ...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டனர்; ஆனால் அந்த விவசாயிகளுடன் சில பணியாக்களும் சேர்ந்து கொண்டு 'கோவில்களுக்குத் 'தீர்த்தயாத்திரை' செய்தனர்" என்று மந்திரி கூறியிருக்கிறார்!

கணவன்மார் கோரிக்கைகளை வற்புறுத்த மனைவிமார் ஆர்ப்பாட்டம்

பாட்னா, ஆக. 27—

பாட்னா சர்க்கார் தலைமை அலுவலக ஊழியர்களின் மனைவிமார்களில் 50 பேர் இன்று முதன் மந்திரியின் இல்லத்திற்கு ஊர்வலமாக வந்து, தங்கள் கணவன்மார்களின்—'இரண்டாவது சம்பளக் கமிஷன் வேண்டும்; பஞ்சப்படியை உயர்த்தவேண்டும்'—என்பன போன்ற கோரிக்கைகளை வற்புறுத்தியிருக்கின்றனர்.

சிலர் குழந்தைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு ஒருமைல் தூரத்திற்குமேலாக நடந்துவந்து, 'விலை ஏற்றத்தால் அவதிப்படுகிறோம்; எங்கள் குழந்தைகளுக்குப் பால் இல்லை; பஞ்சப்படியை உயர்த்தித் தருக' என்று ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

முதன் மந்திரி ஊரில் இல்லாததால், சிறிதுநேரத்தில் கலைந்து சென்ற அவர்கள், 'அன்று ஒரு நாள் சமைப்பதில்லை' என்று முடிவு செய்தார்களாம்!

ஊதிய நிர்ணயக் குழுவின் முதல் கூட்டம்

டில்லி, ஆக. 27—

மத்திய அரசாங்க ஊழியர்களின் ஊதியம் பற்றியும் மற்ற சலுகைகள் பற்றியும் ஆராய்ந்து அறிவிக்குமாறு சமீபத்தில் மத்திய அரசாங்கம் நியமனம் செய்த ஊதிய நிர்ணயக் குழுவின் முதல் கூட்டம் செப். 9-ந் தேதியன்று நடைபெறக் கூடுமாம்.

இடைக்கால நிவாரணம் நிர்ணயிப்பதுபற்றி பின்பற்றவேண்டிய முறை, வழிகள் ஆகியவை அக்கூட்டத்தில் முடிவு செய்யப்படுமாம்.

இடைக்கால நிவாரணம்பற்றிப் பல கேள்விகள் அடங்கிய பட்டியலை வெளியிட்டு, சம்பந்தப்பட்டவர்களின் கருத்தை அறிந்து கொள்வதா, அல்லது நேரில் அழைத்து வாக்குமூலங்களை பதிவு செய்துகொள்வதா என்பது பற்றியும் முடிவு செய்யப்படுமாம்.

சட்டக் கல்லூரியில் அண்ணா

29—8—57 மாலை, சென்னை சட்டக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

கவர்னர் மீது நடவடிக்கை

அரசியலில் தலையிட்டதன் எதிரொலி

மேற்கு பாகிஸ்தான் அரசியல் விவகாரங்களில் தலையிட்டதாகப் புகார் கூறப்பட்டதன் காரணமாக, அம்மாநில கவர்னரான முஷ்டாக் அகமது குர்மானி என்பார் மீது பாகிஸ்தான் மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

குர்மானி தன் பதவியிலிருந்து தானாகவே விலகிவிடவேண்டுமென்றும், இல்லையேல் 'டிஸ்மிஸ்' செய்யப்படுவார் என்றும் பாக். மத்திய அரசாங்கம் அறிவித்திருந்ததாகக் கூறப்படுகிறது.

இதன் விளைவாக, கவர்னர் குர்மானி தன் பதவியிலிருந்து விலகிவிட்டார் எனத் தெரியவருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவ்வாண்டு பட்டம் பெற்றவர்கள் மொத்தம் 5,170 பேர்கள் என்றும், இவர்களில் 947 பேர் பெண்கள் என்றும் தெரியவருகிறது.

டாடா கம்பெனி தயாரித்த எஞ்சின்

'சர்க்கார் பல இலட்சம் ரூபாய் அதிகம் தரச் சம்மதித்ததேன்?'

மக்கள் சபையில் கேள்வி

புதுடில்லி, ஆக. 28—

"இறக்குமதி செய்யப்படுகிற ஒரு இரயில் எஞ்சின் விலை ரூ. 3 5 இலட்சமாக இருக்கும்போது, 'டெல்கோ'வினர் இங்கு உற்பத்தி செய்யும் எஞ்சினுக்கு மட்டும் ரூ. 7 இலட்சம் தரப்படுவது ஏன்?" என்று, மக்கள் சபையில் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இரயில்வே உதவி மந்திரி ஷா நவாஸ் கான், 'டெல்கோ எஞ்சின்களுக்கு விலை அதிகமாகத்தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; ஆனால் இந்த நிர்ணயத்திற்கு முன்னால், டாரிப் கமிஷனைக் கேட்டுத்தான் நிர்ணயித்தோம்' என்று கூறியிருக்கிறார்.

மொராக்கா என்ற உறுப்பினர், 'டாரிப் கமிஷனில் உள்ள அன்னிய நிபுணர்கள் இதுபற்றி என்ன ஆலோசனை தந்தனர்?' என்று கேட்டபோது, 'இதை நீங்கள் உரிய மந்திரிசபையிடம் கேட்க வேண்டும்' என்று பதிலளித்துவிட்டாராம் மந்திரி!

'அதிகமான விலை நிர்ணயம் பற்றி விவாதிக்க வேண்டும்' என்று பல உறுப்பினர்கள் கோரியதின்பேரில், அடுத்த வாரத்தில் விவாதிக்க அனுமதிப்பதாக சபைத் தலைவர் கூறியிருக்கிறார்.

கலைவாணர் உடல்நிலை

சென்னை, ஆக. 28—

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் உடல்நிலை இப்பொழுது மேலும் சீரடைந்து வருகிறது. இன்னும் எழுந்து நடமாடக் கூடிய சக்தி அவருக்கு ஏற்படவில்லையாயினும், நன்றாக எல்லோருடனும் பேசமுடிகிறது. உடல் இன்னும் போதிய பலம் பெற வேண்டுமென்றும், மேலும் 10 நாட்கள் மருத்துவமனையிலேயே தங்கியிருக்க வேண்டுமென்றும் கூறப்படுகிறது.

சென்னையில் தடையுத்தரவு நீடிக்கிறது

சென்னை, ஆக. 28—

சென்னை நகரில் கூட்டங்களோ, ஊர்வலங்களோ, போலீஸ் கமிஷனரின்முன் அனுமதியில்லாமல் நடத்தக்கூடாது என்று நகர போலீஸ் சட்டம் 41-வது பிரிவின்கீழ் விதிக்கப்பட்டிருக்கும் தடை உத்திரவு 29—8—57-ந் தேதியுடன் முடிவடைகிறது. அத்தடை உத்தரவை மேலும் இரண்டு கிழமைகள் (செப்டம்பர் 11-ம் தேதி வரை) நீடித்து கமிஷனர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★

மன்றல் அழைப்புமடல்

★

அன்பு சிவணிய ஐய! அம்மணீ! கனிந்த கைகூப்பு. எதிர்வரும் 30—8—57 வெள்ளிக் கிழமை காலை 8 மணி அளவில், எனக்கும், வழக்கறிஞர் (காலஞ்சென்ற) வேங்கட்டராமன் அவர்கள் மகள் தோழியர் லலிதாவுக்கும் (ஆசிரியர், குருகுலம், திருமறைக்காடு) கலப்புத் திருமணம், மாயூரம் கோமதி திரைப்பட மாளிகையில் நிகழும். மணவினைக்கு அறிஞர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. அவர்கள் தலைமை வகித்து வாழ்த்துரைப்பார்கள். வதுவைக்கு தமர் சூழ வருகைதந்து மன்றலைச் சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

இன்னணம்,
அறிவுடைநம்பி

18, வடக்குவீதி கூறைநாடு, மாயூரம்

★★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டம்

★

திருவள்ளூர்:
30—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: டி. எத்திராசன்
பேசுபவர்: என். வி. நடராசன்

சேலம் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

30—8—57 இரவு 9-மணிக்கு நகர தி. மு. கழகத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும். அதுசமயம் பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

இறக்குமதி கட்டுப்பாடு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மதி செய்ய விரும்பியது; ஆனால் டில்லி சர்க்காரோ, 700 மோட்டார்கள் மட்டுமே இறக்குமதி செய்துகொள்ள அனுமதித்திருக்கிறது,"

என்றும் தோழர் சங்கரபாண்டியன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"டில்லி சர்க்காரின் இறக்குமதிக் கொள்கை மட்டுமல்ல; மந்திரிகளுக்குள்ளேயே ஒரு இணக்கமான ஒத்துழைப்பு இல்லை என்பதும் கண்டனத்திற்குரியதாகும். இதன் விளைவாகத்தான், தவிர்க்கக் கூடிய இறக்குமதி, அளவுக்கு மீறி நடைபெற்றிருக்கிறது,"

என்றும் தோழர் சங்கரபாண்டியன் குறிப்பிட்டிருக்கிறார்.'

இதற்கு உதாரணமாக அவர், டில்லி சர்க்காரின் உணவிலாகா மந்திரி ரூ. 70 கோடி பெறுமான சர்க்கரை இறக்குமதி செய்ததைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஜெயப்பிரகாசரின் எதிர்காலம்?

திருவனந்தபுரம், ஆக. 28—

அரசியல் துறவுபூண்டு, நில[illegible] கொடை இயக்கத்தில் பணி[illegible] யாற்றிவரும் ஜெயப்பிரகாஷ் நாராயணன், காங்கிரசுக் கட்சி[illegible] யில் சேருவார் என்று கருதப்படு[illegible] கிறதாம்; ஆனால், இந்த வதந்தி[illegible] ஆதாரமற்றது' என்று அசோக் மேத்தா கூறியுள்ளார். இன்னும்[illegible] ஓராண்டுக் காலத்தில் மக்கள்[illegible] சோஷலிஸ்டுக்கட்சியின் தலைமை[illegible] பதவியை அவர் ஏற்பார் என்று[illegible] கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழக[illegible] துக்காக தோழர் இரா. செழி[illegible] செழியன் எம்.ஏ., அவர்களா[illegible] அழகிரி அச்சகத்தில் அச்சிட[illegible] பெற்று, (24. சூரியநாராயண[illegible] செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறு[illegible] றது. ஆசிரியர்: இரா. செழி[illegible] செழியன் எம்.ஏ